1555

69

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா ... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3
ஆறுமாத சந்தா ... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஷு மாசி-மீ 17உ 1940 ஷு பிப்ரவரிமீ 29உ | ஸ-9

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

ஊஹும் சரியாயிற்று!! தேசியஸபை அதர்மத்தி லிறங்கியதால் அது ஸம்பந்தப்பட்ட பல இடங்கள் தீக்கிரையாயின. காந்தி ஸேவாஸங்க கண்காக்ஷியிலும் (கல்கத்தா) தீப்பற்றியது.

கராச்சியில் முகரத்தில் வேடிகுண்டு!! ராஜி பேச பேச ஹிந்து முஸ்லீம் சண்டை வலுவடைகிறது. பலருக்குகாயம் மரணம் மனக்கசப்பு!!

நமக்குப் புத்துயிர்!! ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளது மாயவர உபன்யாஸம் தார்மிகருக்கும் மற்றவர்களுக்கும் பேருத்ஸாஹத்தை உண்டுபண்ணுகிறது. அருள் புரிந்த வண்ணம் செய்வன நம் கடமை

பின்பற்றுபவருண்டா? திருப்பதி கலாசாலை தலைவர் ஷஷ்டி பூர்த்தியில் முற்கூறிய பகவத்பாதாள் பட்டமும் ஸம்மானமும் அனுப்பினார்கள். மதபேதமின்றி தன்வரை ஸம்பாவிப்பது இது முதல் முறையல்ல!

நற்பெயரைப் பெற்றிருக்கலாம்! ஹிந்தி விஷயமாக இப்போது அரசாங்கம் செய்தபடி ராஜாஜி செய்து ஹிந்திக்கும் தனக்கும் நன்மை செய்திருக்கலாம். ஆனால் பாழான பிடிவாதமன்னவரைக் கெடுக்கிறது!!

முடியாது தாளாது!! இந்திய ராஜாங்கம் வெள்ளிக்கும் பஞ்சுக்கும் அதிகவரி விதிக்க உத்தேசித்திருக்கிறது. கொடுமை!! இருப்பதா? இறப்பதா?

நிமிஷத்திற்கோர் பேச்சா? ஸிந்துவில் மந்திரி ஸபை பழையபடியே அமைந்தது. ஹிந்துக்கள் கக்ஷிக்கு இணங்கினர். காலைசெய்தி! மந்திரியிடம் நம்பிக்கையில்லை. ஏனமாலை செய்தி! பொருப்புள்ள நிருபர் நிதானித்தெழுதலாம்!

பஞ்சாப்பில்சண்டை!! சண்டையின்றி ஸமரஸமாகவும் ஸமாதானமாகவும் நடக்கத் தெரியாமல் சட்டசபையில் மிககேவலமாக நடந்து பிறர் நகைப்புக் கிடமளித்தது வருந்தத்தக்கது.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

திண்டுக்கல்

சென்ற 18உ நடைபெற்ற ஸங்கக் கூட்டத்தில் ஸ்ரீமான் என். வெங்கிட கிருஷ்ணய்யா அவர்கள் தலைமை வகித்தார் வக்கீல், ஸ்ரீமான் எஸ். ராமஸ்வாமி அய்யர் "ஆத்ம தத்வம்" என்ற விஷயத்தைப்பற்றி பிரஸங்கித்தார்.

காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் பிரிவுக்கு வருந்தி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீ மீனாக்ஷி ஹிந்து ஸேவா ஸங்க நிதி வசூல்

மதுரையிலுள்ள மேற்படி ஸங்கத்திற்கு நிதி சேர்ப்பதற்காகவும் பிராசார நிமித்தமும் ஸ்ரீமான் எம். ஸ்வாமிநாதய்யர் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவில் பற்பலவிடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்.

ஸ்ரீ வானமாமலை, திருக்கருங்குடி, மடாதிபதிகளும் பொதுஜனங்களும் பொருளுதவி செய்து ஆதரித்ததாகத் தெரிகிறது.

(ந.நி.)

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

கீழப்பூங்குடி

பிரமாதி ஷு மாசி மீ 12உ இந்த. ஸங்கம் இதற்காக ஏற்பட்டுள்ள மந்திரத்தில் பகல் 2மணி முதல் 5மணிவரையில் நிகழ்ந்தது ஷை ஸபைக்கு விஜயஞ்செய்திருந்து ஆஸ்திகர்களுடைய வேண்டுதலுக் கிணங்கி. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள தர்மவிப்லவநிவிர்த்திக்கு தக்க பலவுபாயங்களை. சாஸ்த்திரியமாகவும் லவுகிகயுக்தி களுடனும் விரிவாகவும் தெளிவாகவும் பிர்மஸ்ரீ. வைத்தினாதசாஸ்திரிகள் அமிருதவருஷம் போல் சொல்வன்மையால் எடுத்துஉரைத்தார்கள் அடுத்தஸங்க நிகழ்ச்சி மகாசிவராத்திரியன்று வைக்கப்பட்டிருக்கிறது. ந நி

வங்காளத்தில் காந்திக்கு எதிர்ப்பு

கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

ஸ்ரீமான் காந்தி மாலி கன்டா என்றவிடத்தில் நடத்தப்பட்ட "காந்தி ஸேவா ஸங்கத்தின்" கூட்டத்திற்காக வங்காளத்திற்கு வந்தார். அவர் போகுமிடங்கள் பலவற்றிலும், மாணவர்களும், மற்ற ஜனங்களும் ஏராளமாகக் கூடி கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்ததுடன் "காந்தியே திரும்பிப் போ" என்ற கோஷமும் செய்தனர்.

காந்தி ஸேவா ஸங்கக் கூட்டத்தில், காந்தீயத்தை எதிர்ப்பவர்களுக்கும், காந்தி கக்ஷியாருக்கும் பலத்த சண்டை நடந்து பலர் காயமடைந்தனர்.

பொருட் காட்சிக்கு தீ விபத்தும் ஏற்பட்டது. வங்காளமெங்கும் காந்திஜீக்கு எதிரான உணர்ச்சி வலுத்து இருப்பதை காந்திஜீ நேரில் அறிந்தாராம்.

குழந்தைகளின் ஆரோக்யம்.

பரிசுத்தமான உணவுதான் ஆரோக்யத்தை கொடுக்கவல்லது. குழந்தைகளுக்கு, அஜீர்ணம், கட்டி, மாந்தம், முதலிய எல்லாவித நோய்களும், புட்டிகளில், நாள்பட வைக்கப்பட்டிருக்கும் சேர்க்கையான உணவை ஊட்டுவதே. சிறு குழந்தைகளுக்கு, தாய்பால் குறைந்திடின் பயஸ்யா என்னும் கைகண்ட ரஸாயனத்தை, தாய்மார்கள் அருந்தவேண்டும். பயஸ்யா தாயின்பாலை மிகுதியாக வளர்க்கிறது. புஷ்டியாகவும் செய்கிறது.

கிடைக்குமிடம்:—

ATREYA AYURVEDIC WORKS,
Thennore Road, Trichinopoly.

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கும், **டாக்டர் கோஷியே.**

பற்பொடிகளில் சிறந்தது **கிரூஸ்லீட் பற்பொடி** ஒன்றே.

கிரூஸ் லீட்பல் ஆஸ்பத்ரி, ரெயில்வேஸ்டேஷன் எதிரில், **கும்பகோணம்.**

ஆசாரம்

ஆகார நியமங்கள்

முன் தொடர்ச்சி

(வைத்தீஸ்வரய்யர் கல்கத்தா)

வியாதியை அகற்றுவதுபோல் காமக்ரோதங்களையும் ஆகார நியமத்தால் குறைக்கலாம். விட்டமின் என்று பிரயாசைப்படுவதெல்லாம் அறிவின்மை. பணமில்லாதவனுக்கும் புஷ்டியான ஆகாரமில்லாதவனுக்கும் சதை போடுகிறதைப்பார்க்கிறோம். இது மனதைப் பொறுத்தது. கவலை காமக்ரோதங்கள் இல்லாதிருக்கலாம். சிறிது பொருளிருந்தாலும் எதிர் பாராத தாகவும் திருப்தியளிப்பதாவும் இருக்கலாம். முக்யமாய் ஆகார நியம மிருக்கலாம். ஆகாசத்திலிருந்து காற்றும் அதிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் உற்பத்திக்ரமமாகையால் நல்ல காற்றிலும் ஜலத்திலுமில்லாத விட்டமின் பூமியில் உற்பத்தியாகிறவைகளில் இல்லை. இதனாலேயே அரைவயிறு ஜலமும் காற்றும் இருக்க வேண்டிய நியமம். இன்னொரு விஷயம். சாப்பிட்டவுடன் 16முறை வாய்க்கொப்பளிக்க வேண்டும். பல்லிடுக்கி லிருப்பவை போவதற்கும் ப்ராணாபானாதி வாயுக்களே பசிதாக ஜீர்ண ரத்த ஓட்டங்களுக்கு காரணமாதலால் அவைகளைஒழுங்குப்படுத்துவதற்கும் இது அவசியம். சில வருஷங்களுக்கு முன் ஒரு பிரபல முஸ்லீம் லண்டனில் திடீரென இறந்ததாவும் அதற்குக் காரணம் பல்லிடுக்கிலிருந்த ஊத்தைக் கட்டியை விழுங்கி வயிற்றிலிருந்ததாகவும் பத்ரிகையிலிருந்தது.

மேல்நாட்டாருக்கு திடகாத்ரமும் நீண்ட ஆயுளும் எவ்வித முண்டாகிற தென்று கேட்கலாம். மனித எரு, எலும்பு எருக்களால் கத்தரிக்காய் கொழுக்கிறது. ஆனால் சாப்பிட்டால் வியாதி. இதேமாதிரி அவர்கள் தேகம். அவர்கள் மனம் மிகவும் கெட்டது. ஹிம்ஸை செய்வதிலேயே ஆனந்தம். புலிபோல் ஆகாராதி சுகங்களைத் தேடிக்கொள்வதேயன்றி நியாயாந்நியாயம் விசாரிப் பதில்லை. ஆகையால் மனோவிசார மின்றி ஆயுள் வளர்கிறது. இப்பொழுது நிகழும் யுத்தமும், இந்தியாவின் அடிமைத்தனமும், உலகத்திலுள்ள கருப்பு மனிதர் படுந்துன்பமும் அவர்கள் ஹிம்ஸைக்கு அத்தாக்ஷி. நவ நாகரிகத்தில் ஈடுபட்ட இந்தியர்களுக்கு, முக்யமாய் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு கல்மனமும் பிடிவாதமுமே விருத்தியாவது கவனிக்கத் தக்கது. ஐரோப்பிய யுத்தம், உரிமை என்னும் ஆசையாலும் பொறாமை கொண்டு அதைத் தடுப்பதாலும் மூண்டது. இந்தியாவிலும் உண்மையல்லாத உரிமைகளைப் போதித்த முஸ்ஸம்களும் ஸ்திரீகளும் தொழிலாளர்களும் பேராசை கொண்டு வரம்பு மீறுகிறார்கள்.

கல்வி, தொழில் விஷயங்களிலும் சுத்தத்தைக் கருதும் ஆசாரங்களிருக்கின்றன. பூர்வ ஜன்ம பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறே இந்த ஜன்ம முண்டாகிறது. எந்தக் கல்வியோ தொழிலோ ஒரு ஜீவனுக்கு நன்மை பயக்குமோ அவைகளில் பிரயத்தினம் செய்யும் வம்சத்திலேயே அவன் பிறக்கிறான். அவனது முன்னோர்கள் பரம்பரையாக எந்தத் துறையிலிருக்கிறார்களோ அதுவே அவனும் அனுசரிக்க வேண்டியது வெவ்வேறு விஷயங்களில் புகுவதால் அதிருப்தியும் கஷ்ட நஷ்டங்களும் மிகுதியாகின்றன. Efficiency நிபுணர்கள் ஒருவன் செய்து வந்த தொழிலிலேயே விடாமுயற்சி செய்யச் சொல்வது கவனிக்கத்தக்கது. எத்தொழிலிலும் சிரமமும் ஹிம்ஸையுமிருக்கிறது. எவன் தனக்கு ஏறபட்ட தொழிலில் திருப்தியடைந்து அதற்கு வேண்டியதை மாத்திரம் கற்று முழுமனதுடன் விடாமுயற்சி செய்கிறானோ அவன் சுகமடைகிறான், அதிகம் கற்பதால் வேறு துறையிலாசை உண்டாகிறது. அந்தத்தொழிலில் இருப்பவர் அதிகமாவதோடு தன் தொழிலைச்செய்வோர் குறைந்து போகிறார்கள். இதனால் வேலையில்லாமையையும் வேளாண்மையின் கேடும் உண்டாகின்றன. இதனால் அசூயையும், கலகமும், துர்பிக்ஷமும், வயிறுவளர்க்கும் திண்டாட்டமும் பொய் சூது களவுகளும், சுழல்போல ஜனசமூகத்தை வருத்துகின்றன.

எல்லாவற்றிற்கும்மூலகாரணம் இந்திரிய சுகப்பற்று. இதைஅடிப்படையாக கொண்டது மேனாட்டு நாகரீகம். இந்திய நவநாகரீகமும் அதற்கு அடிமை. தொழிலாளர் தனவந்தர், வைத்தியர், விஜ்ஞான சாஸ்திரிகள், ஆராய்ச்சியாளர், ராஜதந்திரிகள் என்ற உலகத்தோரெல்லாம் தன்னலம் தேசநலம் என்று பிறர் பொருளைக் கவர்வதற்கு வேண்டிய உபாயங்களையே தேடுகின்றனர். அதிகச்செலவிற்கும் பணநெருக்கடிக்கும் இந்திரிய ஸேவையே காரணம். ஜனங்களின் நோக்கம் இந்திரிய நிக்ரஹமாகிய தர்மத்தில் திரும்பினால் உலகத்தில் அமைதியேற்படும். எல்லாரும் வயிறு நிறையவுண்டு ஸத்காலக்ஷேப விசாரணைகளுக்கு அவகாசம் ஏற்பட்டுக்களிக்கலாம். (Raising the standard of living) ஆகாராதி வசதிகளை அதிகப்படுத்துவது (Increasing the Purchasing Power) அதிகமாய்ச் செலவு செய்யும் சக்தியை கொடுப்பது என்பவைகளை வற்புறுத்தும் வரையில் உலகத்திற்கு க்ஷேமமில்லை. இதற்கு நேராகத் திரும்பினால் இம்மையே ஸ்வர்க்கமாகும். சிலர் விரும்பினாலும் போதும். (moral rearmament) நல்லொழுக்கத்தை பலப்படுத்துவது என்னும் பேச்சு பலவும் பயனற்றது. (After me the deluge) என்காலத்திற்குப் பிறகு பிரளயம் வரட்டும், அநித்யாநி சரீராணி அந்த ருஸாகமும் மாகேராநி, என்பவை போலவே இந்த நல்லொழுக்கப்பேச்சும் எளியாரை வலியாரடிப்பது என்பது அறவே ஒழியவேண்டும். சில மாணவர்கள் அடிபட்டு உபாத்திமைத்தொழிலுக்கு ஆசைபட்டு பருவத்தில் கிடைத்து தன் மாணவர்களை அடிப்பதுண்டு. காங்கிரஸும் எளிமை நீங்கி யார் எளியவர் என்று ஸநாதநிகளைக் கண்டு பிடிப்பது போலும்? அல்லது ஹிந்தி எதிர்ப்பிலுள்ள திண்டாதாரினுடைய உறவை நாடியுமிருக்கலாம்

(தொடரும்.)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது.
விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)
கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

நாச்சியார் கோவில்

படத்திறப்பு

கும்பகோணத்திற் கடுத்த நாச்சியார் கோயில் எய்டெட் எலிமெண்டரி பாடசாலையில் 17—2—40 சனிகிழமையன்றி ஸ்ரீமத்வ நவமி புண்ணியதினத்தை யொட்டி ஸ்ரீமத்வசாரியார் அவர்களின் படத்திறப்புவிழா, வைபவம், கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ எம். ராமராவ் பி. எ. அவர்களின் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் கும்பகோணம் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதரும் வித்யாஸாகர முதலிய பட்டங்களைப் பெற்ற வருமான ஸ்ரீ கே. எல். வியாஸராய சாஸ்திரி அவர்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் படத்தைத் திறந்துவைத்தார். தம்மாலியற்றப்பட்ட ஸ்ரீமத்வ சதகம் என்ற நூலை யொட்டி ஸ்ரீமத்வரின் மகிமையையும் எடுத்துரைத்தார். தலைவரும் தம் முடிவுரைக்குப் பின்னர் ஆத்தூர் ஸ்ரீ பூவராகமூர்த்தியாசார்யர் பி.எ. பி·எல் அவர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீமத்வாசாரியார் என்ற நூலையும் அப்பாடசாலையின் புஸ்தகசாலைக்குப் பரிசளித்தார். பிறகு நடாதூர் ஸ்ரீ கிருஷ்ணமா சாரியஸ்வாமி (பல மெடல்களையும் தோடாக்களையும் பெற்றவர்) ஸ்ரீமத்வமதத்தையும் இருவரையும் புகழ்ந்து வந்தனோபசாரம் கூறினார் அப்பாடசாலை தலைவர் ஸ்ரீராமகிருஷ்ணன் அவர்களால் மூவருக்கும்மாலை சூட்டிய பின் வைபவம் பூர்த்தியாகியது

ந—நி

ஓர் தர்மபிரபுவின் வியோகம்.

பிரும்மஸ்ரீ ஜெ அய்யு அய்யர் அவர்கள் சென்ற 18—2—40 ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூரில் 83வது வயதில் சிவலோக பிராப்தியடைந்தார். அய்யுஅய்யர் லெக்ஷிமி அம்மாள் அத்வைத வேதாந்தபாடசாலைக்கு ரூ. 65,600 பண்டுவைத்து ஏற்படுத்தியிருக்கிறார் பழமார்நேரியில் பெரியமாடி வீடு அத்வைத ஸபை கிளை பாடசாலையில் ஒரு பாகம் இப்போது சேர்ந்துவிட்டது. பாக்கி 6 மனுஷாள் இருக்கிறார்கள். ரூ. 500க்கு வாங்கி வீடு பழமார்னேரி பீ. என். ஜம்பு அய்யரிடம் சுமார் 83 வருஷத்திற்கு முந்தி சாஸனம் வாங்கினார். அய்யு அய்யர் அவர்கள் தன்னுடைய பந்துக்களுக்கு சுமார் 25000 வரையில் உதவி செய்திருக்கிறார். ஸ்ரீகும்பேச்வர ஸ்வாமி கோவில் ஸ்ரீ காசிவிச்வநாதஸ்வாமி பிரதிஷ்டை செய்திருக்கிறார்· ஷெடியார் மிகுந்த ஆசாரமும் தர்மசிந்தனையும் உள்ளவர். அவருக்கு ஒரு சுவீகார குமாரனும் ஒருபெண்ணும் இருக்கிறார்கள். பழனியாண்டவருக்கு ரூ. 4000 நிலமும் பணமுமாக ரூ 6000 க்கு அய்யு அய்யர் அவர்களும் அவர் சம்சாரமுமாக வருஷாவருஷம் ஜேஷ்டாபிஷேக கட்டளையும் பாக்கி கோடையில் தண்ணீர்பந்தல் தர்மம் ஏற்படுத்தியிருக்கிறார்.

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராம அய்யரவர்களால்மொழிபெயர்க்கப்பட்டது

கலிகோ பைண்ட் இங்கிலிஷ்	1	4	0
சாதாரண ,, ,,	1	0	0
கலிகோ ,, தமிழ்	1	8	0
7, 8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது.	0	8	0

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

குடந்தையில்

ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் சென்ற வியாழக்கிழமை இரவு கும்பகோணத்திற்கு விஜயமானார்கள். ஸ்ரீ ஆதி கும்பேச்வர ஸ்வாமி முதலிய தேவாலயங்களுக்கு எழுந்தருளி ஸ்வாமி தர்சனம் செய்து கொண்டு கல்யாண ராமன் தெருவில் ஸ்ரீமான் ஏ. எஸ். கல்யாண ஸுந்திர சாஸ்திரிகள் கிரஹத்தில் தங்கினார்கள்.

வெள்ளிக்கிழமை மக உத்ஸவத்தன்று ஸ்ரீ ஏ. எஸ். கல்யாண சுந்திர சாஸ்திரிகளால் வெகு சிறப்பாக பிக்ஷை நடத்தி வைக்கப் பட்டது.

மறுதினங்களில் ஸ்ரீசேஷய்யா சாஸ்திரி, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி இவர்களால் பிக்ஷை நடத்தப்பட்டது.

உள்ளூர் வெளியூர்களிலிருந்து அனேகர் வந்து ஸ்ரீஸ்வாமிகளை தர்சனம் செய்தார்கள் ஸ்ரீஸ்வாமிகள் புதன்கிழமை திப்புராஜபுரத்திற்கு எழுந்தருளினார்கள்.

தர்ம உபனயனங்கள்

கும்பகோணத்தில் ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியார் ஸ்வாமி களுடைய நியமனத்தின் பேரில் ஸ்ரீமடத்தின் செலவில் 8 மாணவர் களுக்கு திங்கள்கிழமையன்று தர்ம உபநயநம் செய்துவைக்கப்பட்டது. மாணவர்களுடைய மாதா பிதாக்களுக்கு, சேலை, வேஷ்டிகளும், மாணவர்களுக்கு, வஸ்திரம் தீர்த்த பாத்திரம் பிராம்மண போஜனம், பூரி தக்ஷிணை முதலியவைகளும் மற்ற ஸகல ஸௌகர்யங்களும் செய்து கொடுக்கப்பட்டன. இந்த மாதிரி ஸ்ரீ மடத்தில் அடிக்கடி நடந்து வருவதுவழக்கமே.

வேதபாராயண கோஷ்டி ஸபை

ஸ்ரீ. டி. எல். ஸுப்பய்யர் பிரஸங்கம்

கும்பகோணம் ஸ்ரீஆதி கும்பேச்வரஸ்வாமி மகஉத்ஸவத்தில் எப்போதும் நடத்தப்பட்டு வரும் யஜுர் வேதாதி கோஷ்டிகள் இவ்வருஷத்திலும் வெகு சிறப்பாக நடைபெற்றன. உள்ளூர், வெளியூர் வேத பிராமணர்கள் ஏராளமாக வந்திருந்தினர். பிராம்மண போஜனாதி ஸௌகர்யங்கள் நன்கு செய்யப்பட்டிருந்தன.

சென்ற வியாழக்கழமை மாலை 4மணிக்கு ஷை தேவாலயத்தில் வேதபாராயண கோஷ்டியாருடைய கூட்டமொன்று வழக்கம் போல் நடைபெற்றது. அநேக பண்டிதர்களும், வேத வித்களும், லௌகிக கனவான்களும் அதில் பிரஸன்னமாயிருந்தனர். பிரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் ஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தார். தலைவரின் முகவுரைக்கு பிறகு, ஆஸ்திக சிரேஷ்டரும், உதார புருஷனுமான திருக்கருகாவூர், ஸ்ரீமான். டி.எல். ஸுப்பய்யர், பி.ஏ.பி.எல் அவர்கள் வேதமஹிமை, காயத்ரீயின் கௌரவம், வேதாத் யாயிகளின் பிரபாவம் முதலியவைகளைப் பற்றி மன்வாதிஸ்மிருதிகளிலிருந்து கணக்கற்ற மேற்கோள்களை ஸமயோசிதமாக எடுத்துக்கூறி பிராம்மண தர்மத்தையும் வேதத்தையும் நமது ஸமூஹம் கைவிடாமல் ரக்ஷித்து வந்தால் ஸகல க்ஷேமங்களையும் அடையலாமென்பதை வெகு ஆழ்ந்த உணர்ச்சியுடன், ஸபையோர் பரவசமாகும் வண்ணம் பிரஸங்கம் செய்தார். ஸ்ரீவேம்பு தீக்ஷிதர், மஹா மஹோபாத்யாய, பண்டித ராஜ ஸ்ரீகிருஷ்ணமாசாரியஸ்வமிகள், சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகள், ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியர் ஆகியவர்கள் தொடர்ந்து பேசியதும் தலைவரின் முடிவுரைக்குப் பிறகு வந்தேமாதரத்துடன் கூட்டம் நிறை வேறியது. (ந.கி.)

மாசிமக உத்ஸவம்

கும்பகோணத்தில் இவ்வருஷத்திய மக உத்ஸவங்கள் மிகச்சிறப்பாக நடந்து முடிந்தன ஸ்ரீ ஆதிகும்பேச்வரர் கோவிலில் ஸரியான காலங்களில் புறப்பாடு முதலியவை நடத்தப்பட்டு, மகத்திற்கு முதல்நாளே எல்லாத் தேர்களும் நிலைக்குவரும்படி செய்யப்பட்டது. மகத்தன்றையதினம் மஹாமக புஷ்கரணியில் பல்லாயிரக்கணக்கான ஆஸ்திக ஜனங்கள் ஸ்நானம் செய்தனர் மாலை 1 மணிக்கு ஸ்ரீ ஆதிகும்பேச்வரர் தீர்த்தவாரி வெகு அழகாக நடைபெற்றது, ஜனக்கூட்டம் வெகு அதிகம். ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அச்சமயம் விஜயம்செய்து தீர்த்தமாடினார்கள்.

ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி பிர்மோத்ஸவமும் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி தெப்போத்ஸவத்தில் எவ்வருஷத்தையும்விட கூட்டம் வெகு அதிகமாயிருந்தது. போலீஸ் ஏற்பாடுகளும், ஸுகாதார வஸதிகளும் நன்கு செய்யப்பட்டிருந்தன.

ஸ்ரீ ராமபட்டாபிஷேகம்

கும்பகோணம் பச்சயப்பமுதலித் தெருவில் அட்வகேட் ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் கிரஹத்தில் சில மாதங்களாக விக்ரபாண்டியம் வித்வான் பிரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகளால் நடைபெற்றுவந்த ஸ்ரீராமாயண ப்ரவசனத்தில் ஸ்ரீராமபட்டாபிஷேக வைபவமானது சென்றவாரம் புதன்கிழமை இரவு வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று மத்தியானம் ஸ்ரீ வி. கே. அய்யங்கார் கிருஹத்தில் பிராம்மண ஸந்தர்ப்பணம் விசேஷமாக நடத்தப்பட்டது. இரவு எட்டு மணிக்கு பட்டாபிஷேக கட்டம் வெகு இனிமையாக ஸ்ரீ சாஸ்திரிகளால் உபந்யஸிக்கப்பட்டது. அனேக வைதிக லௌகிக பிரமுகர்களும் பொதுஜனங்களும், ஸ்திரீகளும் தினப்படி போல் நிறம்பக் கூடியிருந்தனர்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்களால் அநுக்ரஹிக்கப்பட்ட சால்வையும், மந்திராக்ஷதை பிரஸாதமும் வேதகோஷத்துடன் ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு கொடுக்கப்பட்டது.

திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ பண்டார ஸன்னதிகள் அனுப்பிய சால்வையும் தக்க மரியாதையுடன் வழங்கப்பட்டது, அந்த அக்ரஹார வாஸிகளும், இதரத்தெரு வாஸிகளும் உபகரித்த திரவியங்களைக்கொண்டு சாஸ்திரியாருக்கு விசேஷ ஸம்பாவனைகள் செய்யப்பட்டன.

ஸ்ரீமான் சுப்ரமண்ய அய்யர் பிரமஸ்ரீ பால கிருஷ்ண தீக்ஷிதர் பிரம்மஸ்ரீ ராமரயணம் வேம்பு சாஸ்திரிகள் முதலியவர்களால் ஸ்ரீ சாஸ்திரியாரின் பிரவசன கௌரவத்தை சிலாகித்துப் பேசப்பட்டதுடன் இந்த கார்யத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டவர்களுக்கும், இதற்கு தமது கிரஹத்தில் இடமளித்து ஸகல ஸௌகரியங்களும் சிரத்தையுடன் செய்து கொடுத்த ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸாமி அய்யங்கார் குடும்பத்தினருக்கும் ஸகல சிரேயஸ்ஸும் உண்டாகும்படி பிராத்திக்கப் பட்டது. ஸ்ரீசாஸ்திரியார் தமது நன்றியைத் தெரிவித்து பதில் கூறியதும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு வைபவம் பூர்த்தியாகியது. ந.கி

கும்பகோணம் வரி செலுத்துவோர் கோரிக்கை.

வரியைக் குறைக்கவேணும்.

1940-ஆண்டு பிப்பிரவரிமீ 25உ மாலை 3 மணிக்கு மேட்டுத் தெரு ஸ்ரீ கணேசர் கோவிலில் டாக்டர் சிவசாமிய்யர் தலைமையில் வரி செலுத்துவோர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

(1) இந்நகர் முனிசிபாலிடியானது நகர வாசிகளுக்கு எவ்விதத்திலும் போதுமான சுகாதார சௌகர்யங்களை செய்து கொடுக்காமலும் இம்மாகாணத்திலேயே ஒரு இடங்களிலும் இல்லாத 24% முனிசிபல் வரி விகிதத்தை ஏற்படுத்தியும் ஜனங்களை மிகவும் உபத்திரவம் செய்கிற தென்றும் இம்முனிசிபாலிடிக்கு தகுந்தபடி வரியைக் குறைக்க வேண்டுமென்று உத்திரவு செய்ய வேண்டுமென்று இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

(2) சாக்கடை திட்டமும் ஜலசப்ளை திட்டமும், உடனே நிறைவேற வேண்டுமானால் இன்னும் 6% வரி புதிதாதப் போட வேண்டுமென்று சுகாதார மந்திரி [Dr. T. S. S. ராஜன்] சொன்ன வாக்குறுதியின் பேரில் நமது முனிசிபாலிடியார் சென்ற வருஷத்தில் 6% புதிதாக வரி போட்டார்கள். புதிய வரி போடாமல் போனால் இருதிட்டங்களும் உடனே நிறைவேறாது என்று சொன்னார்கள். முனிசிபாலிடியார் புதிய வரியை வரி செலுத்துவோர்கள் பேரில் சுமத்தியும் சாக்கடை திட்டமும் ஜலவசதி திட்டமும் இன்னும் ஆரம்பமாகவில்லை. இன்னும் கூடிய சீக்கிரத்தில் திட்டங்கள் ஆரம்பமாகிவிடும் என்று சொல்லவும் இடமில்லை. ஜனங்கள் படும் கஷ்டங்களும். யுத்த காலத்தினால் ஏற்படும்பண நெருக்கடியிலும், பொருளாதார மந்தத்தினால் உண்டாகும் சங்கடகாலங்களில் அதிக வரியை சுமத்தி வசூல் செய்ததை ரேட்பேயர்களுக்கு திருப்பிக்கொடுக்க வேண்டுமென்றும். புதிதாக போட்ட வரியை உடனேகுறைக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும். பொருளாதார நெருக்கடிக்கு பிறகு அதிக வரியை வசூல் செய்து இருதிட்டங்களையும் நடத்த ஏற்பாடு செய்யலாமென்றும் அது வரையில் அதிக வரி வசூலிப்பதை உடனே நிறுத்த உத்திரவு செய்ய வேண்டுமென்றும் இந்த வரி செலுத்துவோர் சங்கம் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது. (ந. கி.)

சுந்திரவிலாஸ் பிரசுரங்கள்

தேவிபாகவதம் முதல் வால்யம்	5	0	0
தேவிபாகவதம் இரண்டாம் வால்யம்	4	0	0
காமாக்ஷி விலாசம்	0	6	0
பெரியபுராணம்	8	8	0
திருவந்தியார் திருகளிற்றுபாடி	2	0	0
குலச்சிறை நாயனார்	0	2	0
சிவஞானபோத கருத்துரை	0	3	0
திருமுருகாற்றுபடை	0	2	0
முருகர் ஸ்தோத்ரம்	0	2	0
தனிகாசல அனுபூதி	0	0	6
யுகதர்மம்	0	2	0
மானவா ஸ்தோரம்	0	0	6

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக் கூடம், லிமிடெட், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸூ மாசி-மீ 17௳

உறுதிமொழி கொடுப்பவருக்கே வோட் செய்யவேணும்

சென்னை ராஜாங்க ஸபையில் காலியாயுள்ள சில ஸ்தானங்களுக்கு மார்ச்சுமீ மத்தியில் எலெக்ஷன் நடக்கப் போகிறது. தஞ்சை ஜில்லாவைப்பற்றிய வரையில் போட்டி பலமாக இருக்குமென்றும் தெரிகிறது. இச்சமயத்தில் வோட்டர்களின் பொறுப்பு வாய்ந்த முக்யக் கடமையைப் பற்றிச் சிறிது எழுதுவது அவச்யமாகிறது.

1935-ம் வருஷத்திய ராஜீயத் திட்டமானது அனுஷ்டானத்திற்கு வந்த பிறகு அதன் போக்கு எப்படியிருக்கிறதென்பதை வோட்டர்கள் அறிந்து நிதானித்து நடந்துக்கொள்ள வேண்டிய ஸந்தர்ப்பம் இதுவே. சென்ற எலெக்ஷனில் வோட்டர்கள் காட்டிக்கொண்ட மனோபாவத்தைஇப்போது மாற்ற வேண்டுமா? நமது பிரதிநிதிகள் தங்கள் உறுதி மொழியை அநுஸரித்து ஜனங்களின் உரிமைகளையும். நன்மைகளையும் கவனித்துக் காத்தனரா? இத்யாதி விஷயங்களை தீர ஆலோசித்து வோட்டர்கள் இப்போது நடந்துகொள்ள வேண்டும். அப்போது நம்மிடம் வந்து வோட் கேட்ட கக்ஷியானது நமது நன்மைகளைக் காப்பாற்றுவதாக வாக்களித்தது. அதன்மீது வோட்டர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துத் தங்களது வோட்டை ஏராளமாக அளித்து மெஜாரிடி பலம் கட்டிக் கொடுத்தார்கள். உத்யோகஸ்தர், வியாபாரி, வக்கீல் மிராசுதார் போன்ற எல்லாப் பிரிவினரும் அந்தக் கக்ஷியாரை பலமாக ஆதரித்து அனுப்பினார்கள்.

ஆனால் இப்பால் நடந்ததென்ன? மெஜாரிடி பலம் கிடைத்தவுடன், அதிகார மமதை படைத்து வோட்டர்களையும், மதிப்புள்ள பிரஜைகளையும் லக்ஷ்யம் செய்யாமல் புரட்சிகரமான வேலைகளைத் துணிவுடன் செய்ய முற்பட்டார்கள். இதன் விவரம் எல்லாவற்றையும் இங்கு எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமில்லை. மொத்தத்தில் வோட்டர்களனைவரையும்ஏமாற்றி, அவர்களுடைய தீவ்ரமான அதிருப்திக்கு காங்கிரஸ் வாதிகள் ஆளாகியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆக்ஷியினால் பாதகமடையாத ஒரு ஸமூகமும் இல்லையெனலாம். எல்லோரும் அதனிடம் வெறுப்புக்கொண்டு விட்டதும் நாட்டில் ப்ரத்யக்ஷமாயிருக்கிறது.

முக்யமாக மத ஸம்பந்தப்பட்ட விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்துள்ள பெருத்த அநீதியானது எக்காலமும் எவராலும் மறக்கக் கூடியதல்ல.

சட்டஸபையில், கிறிஸ்தவர், மஹம்மதியர், ஐரோப்பியர் பஞ்சமர் போன்ற பற்பல ஜாதி மத வகுப்பினர் இருக்கையில் அவர்களுடைய வோட் பலத்தைக்கொண்டு ஹிந்து மதத்தில் பெரிய புரட்சியை அவர்கள் உண்டுபண்ணத்துணிந்தார்களல்லவா? இனியும் இந்த ஆபத்திற்கு இடமளிப்பதா?

இப்போது தேசத்தில், மதத்தையும் ராஜீயத்தையும் பிரித்துவிடவேண்டுமென்றும், ராஜீயத்தில் மதத்தைக் கலக்கக்கூடாதென்றும் ஓர் அபிப்பிராயம் வெகு தீவ்ரமாக ராஜீய வாதிகளிடையில் பரவி நிற்கிறது. ஸுபாஷ் போஸ், ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்ற அனேகர் இதை வற்புறுத்திவருகிறார்கள். ஆலயப்பிரவேசாதி சீர்திருத்தங்களை ஆதரிக்கும் சீர்திருத்தவாதிகள்கூட சட்டமூலமாக மதவிஷயத்தில் நிர்ப்பந்தம் உண்டுபண்ணுவதை கண்டிப்பாக எதிர்க்கிறார்கள். ஜஸ்டிஸ் தலைவரான ஸ்ரீமான் ராமஸாமி நாயகர் கூட மதவிஷயமாக ஜனங்களிடையில் முற்போக்கு அபிப்பிராயம் தானாகவே உண்டாகும்வரையில் மத ஸம்பந்தமான சட்டங்கள் செய்யக்கூடாதென்றுசென்றவருஷம் கான்ப்ரன்ஸில் பேசியிருக்கிறார். ஆகவே காந்தீய காங்கிரஸ் வாதிகள் சிலர் தவிர வேறு எந்த ராஜீய ஸமூக ஸங்கங்களோ, தலைவர்களோ சட்டஸபைகளில் மதஸம்பந்த விஷயங்களை விவாதிக்க இஷ்டப்படவில்லையென்று தெளிவாகிவிட்டது.

காந்திய காங்கிரஸ் வாதிகள் ஜனங்களை நயமாக ஏமாற்றிக் கார்ய ஸித்தி பெற்றுப் பிறகு சட்டசபையில் மெஜாரிடி பலத்தால் மத விஷயமான அட்டூழியங்களைச் செய்யாமலிருப்பார்களென்று எப்படி நம்புவது? தங்கள் இஷ்டப்படியெல்லாம் சட்டசபையில் மதவிஷயத்தை புகவிட்டு அவர்கள் பெரும் ஹிம்ஸை செய்வதற்கு முடிவுகாலம் தான். எப்போது? இதைத்தான் வோட்டர்கள் கவனிக்கவேணும். மதாபிமானிகளுக்கும், சட்டஸபை மெம்பர்களுக்கும் இவ்விஷயமாக ஓர் தக்க உடன்படிக்கை ஏற்படவேண்டியது அவச்யமாகிறது. ராஜ நீதியையும், நியாயத்தையும், பிராஜ உரிமையையும் மதித்து நடப்பதானால் எந்த அபேக்ஷகரும் மதவிஷயத்தில் ஜனங்களின் உரிமையில் பிரவேசிக்க அதிகாரமில்லை. மஹம்மதிய, கிருஸ்தவாதி மதங்களுக்கு இந்த உரிமை பூர்ணமாகக் கொடுக்கப்பட்டிருக்கையில் ஹிந்து மதவிஷயத்தில் மட்டில் ஏன் சட்டஸபை பிரவேசிக்க இடமளிக்கவேணும்? ஆதலால் சட்டஸபையில் மதநடுநிலைமைக் கொள்கையை அவலம்பித்து சட்டமூலமான நிர்பபந்தம் செய்ய உடன்படுவதில்லையென்று வாக்குறுதி கொடுப்பவருக்கே வோட்டர்கள் தங்கள் ஓட்டைக்கொடுத்து சிலகாலமாக தேசத்தில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையை நீக்க இது ஒரு ஸந்தர்ப்பம் ஒரே ஒரு ஸ்தானமாயிருந்தாலும். இந்தக்கொள்கையை வெளியிடுவதே இந்த எலக்ஷனில் வோட்டர்கள் கடமையாகும்

இரண்டொரு ஸ்தானங்களின் வெற்றியோ, தோல்வியோ, விசேஷமாறுதலைச் செய்யமுடியாதென்பது வாஸ்தவமாயினும் இதன்மூலம் வோட்டர்களின் மனமாறுதல் வெளிப்படுவது ஓர் நன்மை. சட்டஸபையில் எதிர்க்கக்ஷி அபிப்பிராயம் வெளிப்படவும், மெஜாரிட்டிக்கக்ஷியின் தோஷத்தை வெளியிடவும், அதன் மூலம் அக்கக்ஷிக்குத் தனது குற்றங்களை அறிந்துதிருத்திக் கொள்ளஸந்தர்ப்பம் ஏற்படவும் இந்தஎலக்ஷன் முடிவால் பிரயோஜன முண்டாகத்தடையில்லை. ஆகையால் ஜில்லாவாஸிகளான எல்லாகக்ஷிபிரமுகர்களும் சேர்ந்து யோஜித்து அபேக்ஷகர்களிடம் தகுந்தபடி உறுதிமொழியைப் பெறவேண்டுமென்று ஞாபகப்படுத்துகிறோம்.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம்

முத்ராதிகாரிகள் நியமனம்

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின், சிஷ்யர்களுக்கு ஸ்ரீ மடத்தின் கார்யங்களில் சிரத்தை அதிகரிக்கவும், ஸம்பந்தம் வலுப்படவும் சிஷ்யர்கள் வசிக்கும் ஒவ்வொரு இடங்களிலும் ஸ்ரீமடத்தின் பிரதிநிதியாக முத்ராதிகாரிகளை நியமிக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சந்திர மௌளீச்வர ஸ்வாமியின் பூஜைகள் பிராம்மண ஸந்தர்ப்பணம், தர்மப் பிரசாரம் ஆகியவை நன்கு நடைபெறும் பொருட்டு சிஷ்யர்கள் சுப காலங்களில் ஸ்ரீமடத்திற்கு ஸம்பாவனைகள் செய்ய வேண்டிய விஷயமும், வருஷ வாரி ஸம்பாவனைகள் சேர்ப்பிக்க வேண்டிய விஷயமும் முத்ராதிகாரிகள் மூலம் கவனிக்கப்படும்.

இதுவரையில் தஞ்சை ஜில்லா கிராமங்களில் தகுந்த அந்தஸ்துள்ள சுமார் 100 பேர்கள் வரையில் ஸ்ரீ ஸ்வாமிகளால் முத்ராதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். முத்ராதிகாரிகளுக்கு பட்டுப் பட்டயமும், பிரம்பு தண்டமும் ஸ்ரீமடத்தின் சின்னமாக அளிக்கப்பட்டது. இன்னும் பலவிடங்களிலும் கூடிய சீக்கிரத்தில் முத்ராதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

முத்ராதிகாரிகள் செய்யவேண்டிய சில முக்கிய கார்யங்களையும் ஸ்ரீ ஸ்வாமிகள், உபதேசம் செய்தார்கள். அதாவது:—உபயனம் ஆனபிறகு மாணவர்களை ஒருவருஷம் வரையில் ஆங்கிலப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் வேதம் கற்றுக் கொடுத்தல். விவாஹத்தில் மற்ற ஆடம்பரங்களை ஒருநாளில் முடித்துவிட்டு 3நாள் ஔபாஸனம் மட்டும் செய்தல். சுபா சுபகாலங்களில், வேதாத்யயனம் செய்துள்ள பிராமணர்களுக்கென்று தனியாக வருமானம் ஏற்படுத்திக் கொடுத்தல். கிராமங்களில் மதமாற்றம் நடவாமல் எல்லா ஹிந்து ஜாதியாரையும் காப்பாற்றல். பசுக்களைவிற்பனை செய்யும் போது ஆஹாரநிமித்தத்திற்காக இல்லையாவென்பதைக்கவனித்தல்.

பிரதி ஏகாதசிகளிலும் புராணச்ரவணம் செய்வதுடன் அங்காங்குள்ள தேவாலயமடாதிகளில் புல் பூண்டு எடுத்து பரிஷ்கரித்தல். மேற்கண்ட தர்மங்களை கவனிக்கும்படி பொதுஜனங்களுக்குப் போதிப்பதும் முத்ராதிகாரிகளின் முக்யகார்யமாயிருக்கும்.

மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலே

ஸ்தாபகர் தினக் கொண்டாட்டம்

சென்னே மைலாப்பூரில் விளங்கி வரும், ஸம்ஸ்கிருத காலேஜ், வெங்கடரமண ஆயுர் வேத ஆஸ்பத்திரி, இவைகளின் ஸ்தாபகராகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய தினமானது 26வயன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மைசூர் திவான், ஸர். மிர்ஸா இஸ்மேயில் அவர்கள் இந்த வைபவத்தில் தலைமை வகித்தார்.

கலாசாலேத் தலைமை உபாத்தியாயர் பிர்ம ஸ்ரீ ராமசந்திர தீக்ஷிதர் அவர்களால் தலைவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், ஸர். அண்ணுமலே செட்டியார் முதலிய பிரபலஸ்தர்களிடமிருந்து வந்த ஆசிக் கடிதம் வாசிக்கப்பட்டது. மைசூர் ப்ரபொஸர் ஸ்ரீமான் ஹிரியண்ணு முக்ய பிரசங்கம் செய்தார். பண்டிட் ஸ்ரீமான் சின்னஸ்வாமி சாஸ்திரிகளும் பேசினுர். மாணவர்களுக்கு பதக்கங்கள் முதலிய பரிசுகள் தலேவரால் வழங்கப்பட்டன.

தலேவர் பேசுகையில் ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய இவ்வுத்தம தர்மத்தை வெகுவாகப் புகழ்ந்து, ஸம்ஸ்கிருத பாஷையின் மேன்மையையும் வற்புறுத்தினுர்.

ஸ்தாபகரின் புத்திரரும், காலேஜை வெகு சிறப்பாக நடத்தி வருகிற வருமான, தர்ம ரக்ஷாமணி ஸ்ரீமான் கே. பாலசுப்பிரமண்ய அய்யரவர்கள் பி. ஏ. பி. எல். தலேவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனேபசாரம் கூறினுர். உத்தர ராம சரித்திரத்திலிருந்து ஒரு பாகம் மாணவர்களால் நடித்துக் காட்டப்பட்டது.

மதுரை முனிஸிபால்டியின்

அக்ரமச்செயல்!

ஸனுதநிகளின் கண்டனம்

மதுரை அகில இந்திய வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் பிப்ரவரி26உயன்று ஸனுதநதர்ம வித்யாலயத்தில் பிர்மஸ்ரீ சங்கரசாஸ்திரிகள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சென்னே ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்யும்படி ஸனுதநிகள் கிளர்ச்சி செய்வதை கவர்னர் லக்ஷ்யம் செய்யக் கூடாதென்றும், அந்த சட்டத்தை ரத்து செய்தால் பெரிய கிளர்ச்சி யேற்படுமென்றும் மதுரை முனிஸிபால்டியின் 28உ கூட்டத்தில் ஓர் தீர்மானம் ஆலோசனேக்கு வந்திருக்கிறது.

இந்தத் தீர்மானத்தைக் கண்டித்து மேற்படி ஸனுதநக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

ஆலயப்பிரவேசமானது முற்றிலும் மத சம்பந்தமானதென்றும் முனிஸிபாலிட்டி இந்த விஷயத்தை யோஜிக்க அர்ஹதையுள்ளதல்லவென்றும், 7 ஆயிரம் மெம்பர்கள் உள்ள வர்ணுச்ரம ஸங்கமானது முனிஸிபல் செய்கையை பலமாகக் கண்டிப்பதாயும், ஆலய பிரவேசத்தை எதிர்ப்பதாயும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கம் ஸனுதனிகள் பொதுக்கூட்டம்

ஆலயப்பிரவேசக் கண்டனம்

சென்ற 25—2—40 ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீரங்கம் கீழச்சித்திரை வீதியிலிருக்கும் ஸ்ரீவானமாமலே மடத்தின் முன் ஏராளமான ஆஸ்திகர்கள் குழுமியிருந்த மஹாஸதஸ்ஸில் ஸ்ரீரங்கம் வக்கீல் எஸ். கஸ்தூரி ரெங்காசாரியார் தலேமையின் கீழ் கும்பகோணம் ஸ்ரீமான் அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாச்சாரியார் ஸனுதனிகளும் அரசியல் நிலேமையும் என்ற விஷயமாக ஒவ்வொரு அரசியல் கக்ஷிகளின் நோக்கங்களேயும், மனப்பான்மையையும் நடத்தையையும், ஜனநாயகத்தின் அடிப்படையான தத்துவத்தையும், ஸனுதனிகள் இத்தருணத்தில் நடந்து கொள்ள வேண்டிய வழியையும் மிக விமர்சையாக எடுத்துக்காட்டி சுமார் 3-மணிகாலம் அமைதியையே பெரிதும் கொண்ட ஸனுதன கூட்டத்தில் பண்டித பாமரர்கள் பிரமிக்கும் வண்ணம் ப்ரஸங்கம் செய்தார். ஜனத்திரள் அவ்வளவு காலம் மிகவும் சிரத்தையுடன் கேட்டு ஆனந்தித்தது. பண்டித ஸ்ரீமான் M. சுந்தர ராஜாசாரியார் வந்தனேபசாரம் கூற 11-மணிக்கு கூட்டம் இனிது முடிவடைந்தது.

முன்னறிக்கைப்படி சென்ற 26–2–40 திங்கட்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீரங்கம் கீழச்சித்திரை வீதியிலிருக்கும் ஸ்ரீவானமாமலே மடத்தின் முன் ஸ்ரீரங்கனத ஸ்வாமி ஸேவார்த்திகளான ஸ்திரீபுமான்களும் அடங்கிய மாபெருங் கூட்டத்தில் வக்கீல் ஸ்ரீ S. கஸ்தூரி ரெங்காசாரியார் தலேமையின் கீழ் தற்கால நிலேமையையும் உத்தேசித்து அவசியமான அடியிற் கண்ட தீர்மானம் ஒன்று அட்வகேட் ஸ்ரீ ஸ்ரீனிவாஸராகவய்யங்காரால் பிரேரேபிக்கப் பட்டு, ஸ்ரீ பி. கே. ராமஸ்வாமி அய்யங்காரல் ஆமோதிக்கப்பட்டு, ஸ்ரீ வரயோகி ராமாநுஜ தாஸரால் ஆமோதிக்கப் பட்டு ஏகமனதாய் நிறைவேறியது அத் தீர்மானமாவது;—

“நாளது வரை ஆகம சாஸ்திரத்திலும் இந்துக்களினல் ஒதுக்கப் பட்டிருக்கும் வகுப்பினர்கள் ஆலயப் பிரவேசத்திற்கு அனுமதிக்கப் பட்டால் ஈசுவர சான்னித்யம் போய் விடு மென்றும், சர்வஜனங்களுக்கும், ராஜாவுக்கும், ராஜ்யத்திற்கும் பெருத்த கெடுதி ஏற்படுமென்றும், ஒதுக்கப்பட்டவருக்கும் முன்னேற்றமும், பிரயோஜனமும் ஏற்படாதென்றும் ஆகையினுல் அவர்களே சொக்கப்பானே கோட்டைவாசல், நாச்சியார் கோட்டை வாசல் தவுட்டரை வாசல் இவைகளுக்குள் அடங்கிய பிராகாரங்களில் பிரவேசம் செய்ய ஸேவார்த்திகள் சம்மதிக்க வில்லே என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது”

பிறகு கும்பகோணம் ஸ்ரீ அக்நிஹோத்திரம் ராமாநுஜ தாத்தாச் சாரியார் அவர்கள் “பல்வேறு மதங்களும் ஹிந்து மதமும்” என்ற விஷயமாக பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் உலகில் பல பாகங்களில் ஹிந்து மதமே நிலேநின்று வந்ததென்றும் ஹிந்து மதத்தின் அம்சம், கடவுள் ஆசாரம் அனுஷ்டிடானம் முதலியவை மிகவும் சீர்மை பெற்று நாகரீகத்துடன் விளங்கிற்று என்றும், நம் ரிஷிகள் மட்டுமல்லாமல் அந்நிய நாட்டார்களும் தங்கள் புஸ்தகங்களில் எழுதி இருக்கிருர்கள். இன்னும் ஹிந்துமதத்தில் விவாஹ காலங்களில் பாணிக்ரஹனம் எப்படி முக்கியமாய் இருக்கிறதோ அதை ஒட்டியே இன்னும் மேல் நாடுகளில் கைகுலுக்குவதை ஆசரித்து வருகின்ருர்கள் என்றும், ஆகையால் ஹிந்து மதம் புராதனமான தென்றும் நம் ஸனுதன ஸ்திரீகள் ஸனுதன தர்ம ப்ரசாரத்திற்குப் படும் பாடுகளேக் கண்டு மிகவும் கேவலமாக எதிரிகள் துஷ்ப்ரசாரத்தைச் செய்வதைக் குறித்துக் கண்டித்தும், இத்துஸ்திரீகள் அடிமைகள் அல்லவென்றும் அவர்களே உயர்ந்தவர்கள் என்று மதம் சொல்லுகிற தென்றும் அவர்களுக்குப் போதுமான கல்வியிருக்கிற தென்றும் பல சாஸ்திர மேற்கோட்டு, நவீன நாகரீகத்திற்கேற்ப பலமேற் கோளுடன் எதிராளிகளும் வியக்கும் வண்ணம் வெகு ரமணீயமாகப் பேசினுர்கள்.

பிறகு தலேவர் பேசினவுடன் சுமார் இரவு 11 30மணிக்கு பண்டிட் எஸ். எம். சுந்தர ராஜாச்சாரியார் தலேவர், உபந்யாஸகர் பொதுஜனங்கள், சங்கத்தின் அங்கத்தினர்கள் முதலியவர்களுக்கு வந்தனேபசாரம் கூற, கூட்டம் மிகுந்த கரகோஷத்தினிடையே இனிது முடிவடைந்தது.

டி. ரெங்கசாமி, ஸ்ரீரங்கம்.

சைதாப்பேட்டை ஹிந்து தர்ம ஸித்தாந்த ஸபை.

ஆலயப்பிரவேசக் கண்டனம்.

பிரமாதி-ஸு மாசி-மீ 6உ (18–2–40) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குமேல் பெருமாள்கோவில் தெரு ஸ்ரீராமானுஜவிஜய விலாசத்தில்.

ஸ்ரீமான் உ. வே. குடவாசல் நரஸிம்மாசாரியார் ஸ்வாமியால் இளயாழ்வாரின். கொள்கை என்னும் விஷயத்தை அதிமேன்மையாகவும் சபையில் எல்லோரும் ரசிக்கும்படியாகவும், தத்காலம் நவீனர்கள் ஸ்ரீ ராமானுஜர் ஆலயபிரவேசத்திற்கு சாதகமாய் நடக்கும்படி ஏற்படுத்தினுர் என்னும் விதண்டாவாதம் செய்வதை கண்டித்தும் ஸ்ரீராமானுஜருடைய கொள்கை,எந்த மதஸ்தர்களும் ஒப்புக்கொண்டது என்றும் அதை உலகமெல்லாம் கொண்டாடுகிறது அதை முழுமையும் அறியாமல் ஆலயபிரவேசத்தில் அவரை சம்பந்த படுத்துவது கூடாது என்றும் அனேக விஷயங்களே பாமரஜனங்களும் அறியும்படி உபந்யாசம் செய்தார் பிறகு மேல்கண்ட சபையின் அங்கத்தினர்கள் கூட்டம்நடந்தது அதில் கே.ஜகன்னுத பந்துலு (ஆனரிமேஜிஸ்ட்ரேட்) தலேவராகவும் ராமானுஜம் பிள்ளே (மாஜி முனிஸிபல் சேர்மன்) உபதலேவராகவும். கிருஷ்ணராவ் (தாலுக்காஎட்கிளார்க்)காரியதரிசியாகவும். எஸ். கே. சுப்பிரமணிய அய்யர் (டிஸ்டிரிக்ட்போர்ட் எட்கிளார்க்கு) பொக்கிஷதாராகவும் கமிட்டி நிர்மாணம் செய்யப்பட்டு. எஸ், கே. சுப்பிரமணிய அய்யரால் வந்தனேபசாரம் செய்யப்பட்டு கூட்டம் இரவு 10 மணிக்கு இனிதாக முடிந்தது.

(காரியதர்சி.)

Mr. C. R. AND TEMPLE ENTRY MUDDLE.

B. S. Nagarajiah, General Secretary, The Vedic Party, Madras. Writes :—

Mr. C. Rajagopalachariar is reported to have said at a public meeting at Madura, referring to the question of Temple-entry "that he would not hesitate to admit his mistake if a wrong thing had been done. But he believed that it was the desire of vast numbers of the people that the temple should be common to all. He for one would personally rejoice only if the people who were opposed to it graciously reconciled themselves to it and accepted it as the will of God." Here, I as a humble citizen had to remind Mr. Rajagopalachariar that the very fact that he brought about the Temple-entry Indemnity Authorisation Act and Ordinance is proof positive that what he has done is wrong. But he did not find it necessary to correct himself though it is accepted on all hands that what Rajagopalachariar did was wrong. Even the greatest of the social reformers and advocates of Temple-entry have condemned the measure as an act of barbarity and uncivilisation. If we consider even from the point of view of the vast number of people supporting and opposing it, it is evident that the opposition is great. This is clear from the fact that Madura Town Varnashrama Swarajya Sangha's membership has outnumbered that of Madura Town Congress Sabha. He further wants the people who oppose Temple-entry to accept it as the will of God. If it is a question of people opposed to it accepting as the will of God just because Mr. Rajagopalachariar says it is the will of God, there cannot be a greater absurdity than this. If it is *really* the will of God, one cannot understand how the same God made the Sanatanists oppose His own will. Here also, either C. R. or his God must be wrong.

He further appeals to the opposition to be satisfied as "they had voiced their opposition and demonstrated their sincerity by action; and that they should gracefully yield to the desire of the majority of the people. Dharma would be real only if it came from the heart." These two statements seem to be contradictory because in one place he recognises the sincerity of the opposition and in another place he wants the opposition to yield which means giving up their sincerity for the cause. That means he wants them not to observe Dharma even as defined by him.

He further questions the "worldly-wisdom of the opposition in submitting petitions to an alien government without trying to compose their differences among themselves with an eye to goodwill and social harmony." He is perfectly right. The Sanatanists approached Congress times without number to have their differences settled. But the Congress turned a deaf ear. Nay, it even asked them to go to Himalayas to have their customs practised safely instead of approaching the Congress to have their differences settled. It is only after such a bitter experience that the Sanatanists approached an alien government. One is at a loss to know *why* Congress people submitted their petitions to the Viceroy to settle the differences between Mr. Gandhi and the late lamented Durbar Viravalla?

Mr. V. I. Muniswami Pillai, detailing the good work of the Congress Ministry is reported to have said that "what Sankara and Ramanuja had not been able to accomplish, the Ministry was able to accomplish by placing the temple-entry Act on the Statute Book." Neither Sri Sankara nor Sri Ramanuja was a legislator with the views of th present leislators. Thgey were entirely of the opposite school of thought and they had accomplished many a thing in their lives which neither the Congress Ministry nor its dictator Mr. Gandhi can dream of achieving. It is nothing but vanity that makes one compare Sri Sankara and Sri Ramanuja with the Congress and its Dictator. While Mr. Muniswami Pillai thinks that temple-entry is an accomplishod fact, his Guru Mr. C. Rajagopalachariar thinks that temple-entry is not yet fully accomplished. This clear from his statement that "if at all the Congress existed after India was freed from foreign shackles, it wou d be for giving the finishing touch to the campaign of temple-entry."

My appeal therefore to Sanatanists is that they should be careful about their opponents and to combat them by organising themselves from village upwards.

காலஞ்சென்ற ஸ்ரீ அய்யுவய்யர் அனுதாப கூட்டம்

கும்பகோணம் அத்வைத ஸபையின் ஆதாரணையில் 27—2—1940 செவ்வாய்கிழமை மாலை 6 30 மணிக்கு, பழமார் நேரி அய்யுவய்யர் அவர்கள் காலமானதைப் பற்றி அனுதாபம் தெருவிக்க ஓர்பொதுகூட்டம் கூடிற்று அதுஸமயம் பென்ஷன் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் தலைமைவஹித்து அய்யுவய்யர் அவர்களின் தர்மங்களை பற்றி வெகுவாக புகழ்ந்து பேசியும் அவரைப்போல் ரூ 65000/— வரையில் தர்மத்திற்காக தியாகம் செய்த பிரபு மிகவும் அரிதென்றும் அவர்களுடைய ஆசாரம் சிலம் இவைகளை பறறி எடுத்தும் உரைத்தார்கள்

பிறகு ஸபை செக்ரடிரி ஸ்ரீமான் எம். கே. வைத்தினதய்யர் அன்னாருடைய தர்ம சிந்தையையும் தர்மம் சாச்வதமாய் நடக்கும் படிக்கு செய்திருக்கும் ஏற்பாட்டையும் எடுத்துரைத்து அடியில்கண்ட தீர்மானத்தை பிரேரித்தார். தீர்மானம் ரிடயர் ஹெட் மாஸ்டர் ஸ்ரீ ஆர் ஸாமினதய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு பிறகு எகமனதாக நிறைவேறப்பட்டது.

தீர்மானம்:—ஸ்ரீ அய்யுவய்யர் லெக்ஷிமி அம்மாள் அத்வைத வேதாந்தபாடசாலை என்கிற பாடசாலையைஸ்தாபித்து அதை நடத்துவதற்காகவும் இதரதர்மங்களுக்காகவும் ரூ. 65,300/ வைத்தபெரியதர்மிஷ்டரும். வைத்திகமதத்தில் சிரத்தையும் ஆசாரமும் சீலமும் உடையவரான ஸ்ரீ அய்யுவய்யர் அவர்கள் 18. 2. 1940 தினம் சிவலோகபிருப்தி அடைந்ததைப்பற்றி அத்வைதஸபா கவுன்சில் ஆதரவில் நடை பெறும் இந்த மீட்டிங் அனுதாபம் தெரிவிக்கிறது. அவர் பிரிவு ஆஸ்தீக உலகத்திற்கு ஒரு பெரிய நஷ்டமாக இருக்கிறது. இதை ஷை யார்மாப்பிள்ளை ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஷையார் பெண் ஸ்ரீமதி சிவகாமிஅம்மாள், சுவிகாரகுமாரன் சி.நாராயணன் இவர்களுக்கு செக்ரடிரி அவர்கள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிறகு நாகப்பட்டணம் வக்கீல் ஸ்ரீ என் ஸாம்பசிவ அய்யர் அவர்களால் எழுதப்பட்ட கடிதம் வாசிக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ ஆர் ஸாமினதய்யர் அவர்கள் ஸ்ரீ ஜி. வி. வெங்கட்டராமய்யர் அவர்கள். டியர்டு இஞ்சினீயர் எஸ். ஸாமினதசாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ எஸ். மகாலிங்கஅய்யர் அவர்கள் பாடசாலை வித்யார்த்திகள் இவர்கள் அய்யுவய்யர் அவர்களின் தர்மத்தை பற்றி புகழ்ந்தும் அன்னாருடைய பிரவு ஆஸ்திகர்களுக்கு ஒருபெருத்தநஷ்டம் என்றும் பேசினர்கள் ரிடயர்டு இஞ்சினீயர், ஸ்ரீ ஸாமினத சாஸ்திரிகள் அவர்களால். அய்யுவய்யர் அவர்களுடைய உருவப்படம் ஒன்று பாடசாலைக்கு அளித்தும் ஷை யாருடைய ஞாபகார்த்தநிதிக்காக ரூ 25/ கொடுப்பதாகவும் வாக்களிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ந கி)

கட்டாய ஹிந்தி ரத்து செய்யப்பட்டது

காங்கிரஸ் மந்திரி ஸபை செய்திருந்த கட்டாய ஹிந்திப் படிப்பு உத்திரவை சென்னை கவர்னர் ரத்து செய்து விட்டார். ஹிந்தியை இஷ்டப் பாடமாக 6-வது வகுப்பு வரையிலும் போதிக்கலாமென்றும் ஸர்க்கார் உத்திரவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிந்தி போதிப்புக்காக ஸர்க்கார் செய்து வந்த பண உதவி நிறுத்தப்பட மாட்டாதாம்.

மதராஸ்

நுங்கம்பாக்கம் அக்ரஹாரத்தில், உடையாளுர் வித்வான் ப்ரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால், சென்ற 28—1—4— முதல் நடத்தப் பட்டுவரும் 'ஸ்காந்த புராண உபன்யாஸத்தில்' 11—2—40 ஞாயிற்றுக்கிழமை தினம் 'ஷண்முக ஜனன உபன்யாஸம்' நடைபெற்றது. அச்சமயம் திருப்புகழ் மணி டி. எம் கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் விஜயம் செய்து, திருப்புகழ் பாடி ஸ்ரீ முருகனையும், சாஸ்திரிகளையும் கொண்டாடினர்.

ந, கி.

திருச்சினாப்பள்ளி

திருச்சி ஸ்ரீமத் மத்வ ஸித்தாந்த ஸபையின் சார்பில் ஸ்ரீமத்வ நவமி மகோற்சவம் மூன்று நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது 17௳ மத்தியானம் அலங்கார பக்தியுடன் பிராம்மண ஸந்தர்ப்பணையும், இரவில் ஸ்ரீ வெங்கடரமணாசாரியார் அவர்களால் ஓர் ஹரி கதையும் 18௳ மாலை கும்பகோணம் எம். ராம ராவ் பி.ஏ., அவர்களால் "மாத்வ ஸித்தாந்தமே ஸித்தாந்தம்" என்பதைப் பற்றி ஓர் உபன்யாஸமும், 19௳ இரவு திருச்சி ஸ்ரீராமாசாரியார் அவர்களால் ஸ்ரீ ருக்மிணி கல்யாணம் என்ற கதா காலக்ஷேபமும் நிகழ்த்தப்பட்டது.

ந. கி.

P.T. பாணீ அண்கோ பிரசுரம்.

பூஜாராமாயணம்	0	1	0
அகிலாண்டேச்வரீ } அக்ஷரமாலிகா	0	1	0
ஸ்தோத்ரமாலாஸ்துதி மஞ்சரி	0	3	0
கல்பத்ரயம்	0	4	6
விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	0	4	0
லக்ஷ்மி ,, ,,	0	6	0
லலிதா ,, ,,	0	6	0
சுப்ரமண்ய பூஜாவிதி	0	3	0
யஜுஸ் ஸந்யாவந்தனபாஷ்யம்	0	5	0
திருப்புகழ் பஜனை	0	1	6
ஸ்யாமளா தண்டகம் (நாகரம்)	0	1	0
மயில் விருத்தம் வேல் விருத்தம்	0	1	0
விருத கல்பம்	0	6	0
சாமளா தண்டகம்	0	1	0
பஜகோவிந்தம்	0	1	0

கிடைக்குமிடம்.— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்,

மக்கள்கடமை

நாகரீகம்

(ஸ்ரீ. கே. முத்துகிருஷ்ண சர்மா சிதம்பரம்)

ஒவ்வொரு தேசமக்களும் தன் தன் நாகரீகத்தை காப்பாற்றிக்கொள்ள பெரும் பாடுபடும் இந்நாளில், நமது தேசமக்கள் தமது நாகரீகத்தை கைவிட நினைப்பது வருந்தத்தக்க விஷயமாகும். பிறநாடுகளிலுள்ள தேச சேவிகள் தாம் பிறருடன் செய்யும் சண்டைகளுக்கு தங்களின் தேச நாகரீகத்தை காப்பாற்றிக் கொள்வதே முக்கிய நோக்கமென்று கூறிக்கொள்கிறார்கள். நமது தேசசேவிகள் மட்டும் தமது புராதனநாகரீகத்தை இழப்பதற்கு உள் நாட்டுக் கலகத்தை விருத்திசெய்து வருகின்றனர். நாகரீகத்தில் முதல் பரிசு பெற்றது நமது பாரத தேசமேயாகும். இதுவரை நமது தேசத்தில் பல நெருக்கடிகள் சம்பவித்த போதிலும நமது மக்கள் பிறருடன் ஜீவகாருண்ய மற்ற சண்டையை பின்பற்றாததே நாகரீகத்தின் சிறப்பிற்கு முக்ய அத்தாட்சியாயும் ஆகும். ஸ்ட்ராபோ, என்ற பிறதேசத்தவர் நமது நாகரீக வாழ்க்கையைப் புகழ்ந்து இந்தியாவில் வீட்டை பூட்ட சாவிவேண்டாம். சாஸனம் எழுத மசி பேனா காகிதங்கள் தேவைஇல்லை என்று கூறினர். ஆனால் அவரே இன்று நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கையை பார்த்தால் காட்டில் வசிக்கும் இயற்கை விரோதமுள்ள பிராணிகளாகக்கூட நம்மை நினைக்க நேரிடலாம்.

இதற்குமுன் பல தடவை நம் புராதன நாகரீகம் பிற ஆட்சிகளிலும் பிற மதங்களிலும் சிக்கியிருப்பதாய் சரித்திரம் கூறுகின்றது. அப்பொழுதும் தருமம் என்ற கத்தியைத் தாங்கிய நமது முன்னோர்கள் நமது நாகரீகத்தைக் காப்பாற்றி நம்மிடம் ஒப்படைத்து விட்டனர். சத்துருக்கள் பிறர்களாதலால் நம் முன்னோர்கள் மேன்மையடைந்து விட்டார்கள். இப்பொழுதேவெனில்நமது பழக்கவழக்கங்கள் நமது தேசஜனங்களாலேயே தூற்றப்படுகின்றன. பிறர் கைத் தடியினால் தட்டி எரியலாம். நம்கையே சர்ப்பமானால் யாது செய்வோம். இனியும் இவ்விதக் கிளர்ச்சிகள் நமக்குள் நிலைக்குமானால் தேச நலமென்பது தலைக்காட்ட வழி இருக்காது எனவே, நமது நாகரிகத்தின் சிறப்பு முறை என்ன? நமது நாகரிகம் தடை படுவதற்குக் காரண என்ன? எவ்விதம் திரும்பப் பெறுவது? என்னும் இம்மூன்றுகளே இவ்வியாசத்தின் நோக்கமாகும்.

நாகரிகம் என்பதுதிருந்தியவாழ்க்கையை குறிப்பிடும் ஓர் சொல். அறிவால் சீர்திருத்தப்பட்ட நல்லொழுக்கமே திருந்திய வாழ்க்கையாகும். ஒழுக்க மில்லாத அறிவிற்கோ அறிவில்லாத ஒழுக்கத்திற்கோ வாழ்க்கையில் சிறப்பில்லை. ஒழுக்கம் வெளி, உள் என இருவகையாகக் கொள்ளலாகும் இவ்விரண்டில் உள் ஒழுக்கமே மிகவும் முக்கியமானது. வெளி ஒழுக்கத்திற்கு ஆடையாபரணங்கள் உதவி புரியலாமாயினும் திலகம் சிகைபோன்றவைகளே வெளி ஒழுக்கத்தின் முக்கியாம்சங்களாக நமது நாட்டில் கருதப்பட்டு வந்தன. உள் ஒழுக்கம் சமூக வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமான முறையில் நமது நாட்டில் தருமத்தின் பெயரால் சீர்திருத்தப்பட்டிருக்கிறது. மனிதனின் இயற்கை குணம், சேர்ந்து வாழும் தன்மை வாய்ந்தது. சேர்ந்து வாழ ஒவ்வொருவன் மனமும் ஜீவகாருண்யமயமாய் ஆகவேண்டும். ஜீவகாருண்யத்தை உண்டு பண்ண சிறந்த சாதனமாக விளங்குகிறது இந்து தருமமேயாகும். இந்து தர்மத்தில் வர்ண தருமம் முதலிய ஆறு பிரிவுகள் காணப் பட்டாலும் இந்து என்ற தன்மைக்கு அஹிம்ஸை முதலிய ஏழு தருமங்களே முக்கியமானவை. இவ்வேழு தருமங்களை தென்மொழியில் முறையாக, கொல்லாமை, உண்மை, திருடாமை, பரிசுத்தம், புலனடக்கல், தியாகம், சேவை என்று கூறுவார்கள் இவைகளில் முதன்மையான அஹிம்ஸையை நிலை நிறுத்த எட்டு ஆத்ம குணங்களும் மனிதனுக்கு முக்கிய மென்றும் கூறுவதுண்டு. ஆத்ம குணம் என்பதற்கு மனிதின் தன்மை யென்றே பொருள் கூறலாம். நமது நாட்டின் புண்ய விசேஷத்தால் ஜீவகாருண்யமே தரும சாஸ்திரக்காரர்களில் உருவாக தோன்றி இவ்வித தருமங்களைக் கொண்டு நமது நாகரிகத்தை விருத்தி செய்து வந்தது. தருமம் என்று எண்ணம் அல்லாமல் மக்களின் மனம் ஜீவகாருண்யத்தை நாடாதென்பது வெளிப்படையான உண்மை யாகும். இதுபற்றியே அறம் என்பதின் கவலை ஜீவகாருண்யம் என்று தென்மொழியில் கூறப்படும். அறவினை யாதெனிற் கொல்லாமை, என்று ஓர் பெரியார் கூறியுள்ளார். இவ்விதம் பூர்ண அஹிம்ஸையே இந்து மத லக்ஷியமானாலும் தருமஸ்தாபனத்திலோ தர்மசேர்க்கையிலோ ஓர் அளவு அது, வரையறுக்கப் பட்டதாகஇந்துதேசசரித்திரம் கூறும். (தொடரும்)

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

சேவாஸதனம்

மூன்றாவது ஆண்டுவிழா வைபவம்

இராமேஸ்வரம்

ஷை சதனத்தின் சார்பாக ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசிருங்கிரி ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளின் ஸ்ரீமடத்தில் இவ்வூர் லலிதாவிலாச சாஸ்திர பாடசாலை மாணாக்கர்களும் மற்றும் பல பிரமுகர்களும் நம் ஸனாதன தர்மம் சிறப்புற்றோங்கி வளரும் வண்ணம் விஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணம் மிகச் சிறப்பாக நடத்தி வருவதில் வழக்கம்போல் 14-2-40ல் மூன்றாவது ஆண்டு விழா வைபவம் மிக விமர்சையாக நடைபெற்றது. ஷை வைபவத்தை முன்னிட்டு ஸ்ரீ ஆசார்ய பகவத் பாதாள் அவர்களுக்கு அன்று காலையில் அபிஷேக தீபாராதனைகளும் வேதோபநிஷத் பாராயணங்களும் நடைபெற்றன.

மாலை 4 மணிக்கு கொடிப் படத்துடன் பல சனாதனப் பிரமுகர்களும் மற்றுமுள்ள சனாதனிகளும் பின்தொடர, வாத்யகோஷங்களும் முழங்க ஊர்வலமாக சுமார் 5மணிக்கு ஸ்ரீ மடம் வந்துசேர்ந்தனர். எல்லா வகுப்பினர்களும் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஸ்ரீ மடத்தின் வாயிலில் குழுமியிருந்தார்கள். அது சமயம் ஓர் பொதுக் கூட்டமும் நடந்தது அக்கூட்டத்திற்கு பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்ட் ஸ்ரீ வி. பீமாசங்கர பட்டர் அவர்கள் அக்கிராஸனராக இருந்தார்கள். அவ்வமயம் ஹிருஷீகேசமிருந்து விஜயம் செய்திருந்த ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர சுவாமிகள் அவர்கள் சனாதன தர்மத்தையும் ஷை தர்மக் கொடியின் சிறப்பையும் பற்றி மிக உருக்கமாகவும் அழகாகவும் ஹிந்தியில் சுமார் 1 மணி நேரம் பேசினார்கள் அவ்விஷயத்தை எல்லோரும் நன்குணருமாறு தலைவர்களாலேயே தமிழ் மொழிபெயர்த்து கூறப்பட்டது. பிறகு சாஸ்திர பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள். தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைப் பற்றி பல பிரமாண வசனங்களுடன் மிக அழுத்தமாக கண்டித்துப்பேசி ஷை சட்டத்தை மே. த. வைஸ்ராய் அவர்கள் ரத்து செய்யவேண்டுமாயும் கேட்டுக்கொண்டார்கள்.

நிகமாகமப்ரவீண ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் (இவ்வூர் வர்ணாச்ரமஸ்வராஜ்யசங்க பிரஸிடெண்டு) வேதசாஸ்திரங்களின் பெருமையைப்பற்றி பல பிரமாணங்களுடன் மிகத் தெளிவாக உபன்யசித்தார்கள், பின்பு சபையோரின் வேண்டுகோளின்பேரில் தலைவர் ஸ்ரீபீமாசங்கர பட்டர் அவர்கள் ஸனாதன தர்மக்கொடியை த்வஜஸ்தம்பத்திற்கு விநாயக பூஜை வாஸ்து பூஜை முதலியன நடத்தி வேதகோஷம் ஜயகோஷம் வாத்யகோஷமும் முழங்க சபையோர்கள் எல்லோரும் கைகூப்பி நின்றுகொண்டிருக்க உத்தம சுபமுகூர்த்தத்தில் ஏற்றிவைத்தார்கள். பிறகு ஸ்ரீ சிவராம் பரான்ஜபே வேதசாஸ்திரப்ரவீணர் அவர்கள் தற்கால நிலைமையையும் இனி நாம் நடந்துகொள்ளவேண்டிய முறையையும் தெளிவாக சம்ஸ்கிருதத்தில் உபன்யஸித்தார்கள். ஷைவிஷயத்தை ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் மொழிபெயர்த்துக் கூறினார்கள், பிறகு தலைவர் ஷை சேவாஸதனத்தின் அங்கத்தினர்களானவித்யார்த்திகளின் வளர்ச்சியில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பக்தி சிரத்தையையும் விரிவாக எடுத்து மிக அருமையாகவும் இனிமையாகவும் பேசிமுடித்தார்கள்.

பிறகு பாடசாலை உபாத்தியாயர் கே. என். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்களால் தலைவருக்கும் உபன்யாசகர்களுக்கும் மாலை இட்டு வந்தனோபசாரம் செலுத்தி சபையோர்க்கும் நன்றி கூறினார்கள். பிறகு ஆசார்யபாதாளுக்கு தீபாராதனை முதலியன நடத்தி பிரஸாத விநியோகம் செய்து சந்தன தாம்பூலங்கள் வழங்கப்பெற்று இரவு சுமார் 11 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

ந. கி.

மேல்மங்கலம்

வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

பிரமாதி-ஞு மார்கழி-மீ 28உ முதல் தைமீ 1உ வரை எட்டுநாள்களிலும் திருநெல்வேலி ஜில்லா காரக்குறிச்சி பிரம்மஸ்ரீ லக்ஷ்மண சாஸ்திரிகள் (காசி பண்டிட் ராஜாராஜேச்வர சாஸ்திரிகள் அவர்கள் சிஷ்யர்) பகவத்கீதா உபன்யாஸம் செய்தார்கள்.

பிரமாதி-ஞு தை-மீ 22உ மாலை 5மணி முதல் இரவு 7½ மணிவரை பிரம்மஸ்ரீ எம். வி. சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள் தலைமையில் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க அத்யக்ஷர் ஸ்ரீ என் நடேசய்யரவர்கள் மதுரை முதலிய இடங்களில் நடைபெற்றதீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தும், காங்கிரஸ் மதவிஷயத்தில் பிரவேசிப்பதைக் கண்டித்தும் வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்கத்திற்கு மெம்பர்கள் ஏதேஷ்டமாகச்சேரவேண்டுமென்றும் ஒவ்வொரு ஊர்களிலும் தவறாது ஸங்கங்கள் நிறுவி

தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.



ஆழ்வார் திருநகரி கோவிலில் தகாரறு

ஆழ்வார் திருநகரி சனதன தர்ம சபாத் தலைவரின் மாமா மனைவி மரணம் காரணமாக அவர் 3 நாள் தீட்டில் ஏதோ அஸௌகர்யத்தால் 3வது நாளில் க்ஷவரம் செய்து கொள்ள முடியாமல் நாலாவது தினம்காலையில் க்ஷவரம் செய்து ஸ்நானம் செய்த பின் சநாதனத் தலைவர் கோயிலுக்கு சென்றார். அன்றை தினம் தீட்டிருப்பதாய்ச் சிலர் கக்ஷி கூறினர், தலைவர் சாஸ்திர மூலமாய் ஆதாரம் காட்டி நான்காவது தினம் தீட்டில்லை என எடுத்துரைத்தார். கோயில் நிர்வாஹ ஆபீஸர் தீவிர காங்கிரஸ் வாதி, ஸ்ரீ L. R. குருசாமி நாயிடுவால் சனதனத் தலைவருக்கு, சம்புரோக்ஷணம் செய்யவேண்டியது அவசியமாய் யிருப்பதால் வந்து நடத்தி வைக்க வேண்டுமெனவும் இல்லையேல் கோயில் செலவில் நடத்தி பின் வசூல் செய்யப் படுமெனவும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. சனதனத் தலைவரால் உடன் எக்ஸிகூடிவ் ஆபீஸருக்கு கொடுக்கப்பட்ட பதிலில் விஷயங்களை தெரிந்து கொள்ளாமல் தவறுதலான முறையில் ஏதாவது நடத்தினால் தகுந்த நடவடிக்கைகள் நடத்தப் படுமென குறிப்பிடப் பட்டிருக்கின்றன. திருநகரி வாசிகள் பலர் தர்பணமில்லாத மூன்று நாள்த் தீட்டுக்காரர் 4 தினம் காலையில் க்ஷவரம் செய்து கொள்வதால் அன்று தீட்டுக் காப்பது வழக்க மில்லை எனவும் சாஸ்திரத்திலும் அப்படியே யிருப்பதாயும் கண்டு கோயில் எக்ஸிகூடிவ் ஆபீஸரிடம் எழுத்து மூலமாயும் அறிவித்தனர். 6வது நாள் காலை கோயில் காரியம் ஆனபின் சம்புரோக்ஷணம் நடைபெற்றது. இது விஷயமாய் பல விடங்களிலுள்ள சாஸ்திரக்ஞர்களும் உண்மையை ஆர்ய தர்மம் வாயிலாய் வெளியிடுதல் நலமென சொல்லப் படுகிறது ஜனன மரண மூலம் தீட்டு ஏற்படுகையில் க்ஷேக்வைத்த பிராமணர்கள் குடுமியை எடுக்காமலிருப்பின் தீட்டுப் போகுமா? என்பதும் தெரிய வேணும். (ந. நி)

தாம்பிரவர்ணியில் தண்ணீர் பஞ்சம்

திருப்புளியங்குடியில் தெய்வ பிரார்த்தனை

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரவர்ணி நீர்பாசன நஞ்சை நிலங்கள் பெரும்பாலும் மழையின்மையால் 2வது போகம் பிசானம் தீய்ந்து போகும் நிலையிலிருப்பதால் மழைக்காக விவசாயிகள் தெய்வ பிரார்த்தனை செய்துவருகின்றனர். சிலதினங்களில் வருண பகவான் கிருபை செய்யாவிடில் ஒவ்வொர் கிருமத்தில் உள்ளோர்க்கும் பல்லாயிரக்கணக்கில் நஷ்ட முண்டாகும் நிலையிருந்து வருகிறது. சனிக்கிழமையன்று பிரபல திவ்யக்ஷேத்ரமான திருப்புளியங்குடி எம்பெருமானுக்கு எண்ணைக் காப்பு உத்ஸவம் திருமஞ்சனம் செய்து பிரார்த்தனைகள் செய்து இரவு கெருட சேவை வைபவமும் விசேஷமாய் நடத்தப்பட்டன. விரிவஜா விஷயமாய் கலைக்டரிடமும் விவசாயிகள் முறையிட்டுள்ளனர். (ந. நி.)

மதுரை ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபை

எட்டாவது வருஷோத்ஸவம்

நிகழும் பிரமாதிஸு மார்கழீ 18, 19, 20, (1940ஸு மார்கழீ 1 2 3) வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எம்பெருமான் திருவருளால் இச்சபையின் எட்டாவது வருஷோத்ஸவம் மதுரை தெற்குச் சித்திரை வீதியிலிருக்கும் வெள்ளியம் பல மண்டபத்தில் இனிது நடைபெறும்.

அப்பொழுது ஸபையின் நிரந்தர அக்ராஸனர் மதுரை அட்வகேட் ஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனத்தில் காஞ்சி, ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமி, உத்தமசீலி ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி சிரோமணி ராமகிருஷ்ண அய்யங்கார் முதலிய சிறந்த வித்வான்கள் அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உபன்யஸிப்பர்கள்.

ஆஸ்திகரனைவரும் விஜயம் செய்து உத்ஸவத்தைச் சிறப்பிக்கப் பிரார்த்திக்கிறேன். காரியதர்சி.

நேமம் ஆற்காடு

வருஷாபிஷேகம்

பிரமாதிஸு மாசிமீ 11உ பௌர்ணமி மகாநக்ஷத்திரம் சுக்கிரவாரம் கூடிய சுபதினத்தில் வழக்கம்போல் குன்னக்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் பிரம்மஸ்ரீசிவராமய்யர் அவர்களால் சிறப்பாய் நடத்தப் பட்டது. பஜனை முதலானதுகள் மகா ஜனங்களால் நடத்தப் பட்டது போற்றத் தக்கது.

ஒ-நீ

திப்பிராஜபுரம்

பிரம்ஹ வித்யா ஸபா

11—2—40உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ப்ரும்மஸ்ரீ டி. எல். ஸுப்ப அய்யர் அவர்கள், "ப்ராம்மண்யமும், வர்ணாச்ரம தர்மமும்" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தர். முடிவில் ஜோஷியாரும், ப்ரும்மஸ்ரீ எம். ராமய்யர் அவர்களும் திருவிடமருதூர் (காலஞ் சென்ற) ஸ்ரீ விச்வேச்வர கனபாடிகள் அத்யயன பாடாசாலை இப்பொழுதும் ஸரிவர நடந்து வர திரவ்ய தான்ய ஸகாயம் செய்யவேண்டியதைப்பற்றி உருக்கமாகச் சொன்னார்கள். இவ்வூரிலும் வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளைக் கொண்டு ஸம்ஸ்கிருத பாடம் ஆரம்பித்திருக்கிறதை வெகுவாக சிலாகித்து பேசினார்கள்.

அன்று இரவு 8 மணிக்கு திருவையார் ப்ரும்மஸ்ரீ "மஹா கதக ரத்னம்" அண்ணாசாமி பாகவதரவர்களால் "சந்தி ரஹா ஸாக்யானம்" என்னும் ஹரிகதா காலக்ஷேபம், இனிய கான ரஸத்துடனும், கதைச் சுவையுடனும், ரொம்ப அழகாக நடந்தது. நாலா பக்கங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் இரண்டு தினமும் கூடியிருந்தார்கள். (ந. நி.)

மேலமங்கலம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் உருக்கமாய் பேசினார்கள். தலைவரவர்கள் முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீ எம் எஸ் ஹரிஹரய்யர் அவர்களால் வந்தனம்கூறப்பெற்று இனிது முடிவு எய்தியது.

பிரமாதிஸு கார்த்திகைமீ 23உ முதல் பிரம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளால் பிரவசனம் செய்யப்பட்டுவந்த ஸ்ரீ ருத்ர. பாஷ்யம் நாளது மாசிமீ 6உ ஞாயிற்றுக்கிழமை தினம் இனிது முடிவு எய்தியது சாஸ்திரிகளுக்கு வேதாசீர்வாத தாம்பூலம் வழங்கப்பட்டு காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று பூர்த்தியானது.

கீதாபாஷ்யம் காலை 9மணிமுதல் 10½ மணி வரையும் மாலை 3 மணி முதல் 5 மணி வரை மனுஸ்மிருதியும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சாஸ்திரிகளால் பிரவசனம் செய்யப்பட்டு வருகிறது. (ந-நி)

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.